714
3-56

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்."

மரம் 1	துன்முகி ஆனி 18௳ (1—7—56)	கிளை 5, 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - AUG 1956
MADRAS

விவசாயமும் கூட்டுறவும்

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே, விவசாயி விவசாயம் கிராமங்களின் முன்னேற்றத்திற்காக பல திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்காக பெருமளவு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களில் பல கூட்டுறவு சங்கங்களின் மூலம் செய்யப்படவிருப்பதால், 2-வது திட்டத்தில் கூட்டுறவு முறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இத்திட்டம் சரியான முறையில் முன்னேறி குறிப்பிட்ட லக்ஷியத்தை அடையவேண்டுமானால் கூட்டுறவின் தத்துவத்தை நன்கு அறிந்தவர்களும் பயிற்சிபெற்ற நல்ல சிப்பந்திகளும் தேவையாகும். ஐக்கியம், நாணயம் இரண்டுந்தான் கூட்டுறவின் அடிப்படை தத்துவம். கூட்டுறவு சங்க அங்கத்தினர்கள், சிப்பந்திகள் இவர்களிடம் இவ்வைக்கியமும் நாணயமும் குறையும்பக்ஷம் கூட்டுறவின் லக்ஷியம் சிதறுண்டுபோகும்.

இன்று கூட்டுறவு இயக்கத்தில் பல தவறுதல்கள் ஊழல்கள் ஏற்படுவதை காண்கிறோம். இதற்கு காரணம் போதிய கல்வியும், கூட்டுறவின் தத்துவங்கள் தெரிந்தவர்களும் இல்லாமையே. ஓரளவு நாணயமும் பயிற்சியும்பெற்ற சிப்பந்திகளின் பற்றாக்குறையுமாகும். எனவே, இம்மாபெரும் சாதனைகளை

நிறைவேற்ற போதிய பயிற்சியும் அனுபவமும் இல்லாத நிலைமையில் கிராம கூட்டுறவு சங்கங்களிடம் அதிக பொறுப்புக் களை கொடுப்பது குதிரைக்குமுன் வண்டியைப் பூட்டுவதற்கு ஒப்பாகும்.

கூட்டுறவு சங்கங்கள், பஞ்சாயத்துகள் ஆகியவைகளிடம் அதிகமான பொறுப்புக்களை ஒப்படைக்குமுன் அங்கத்தினர் கள், நிர்வாகிகள், பொதுமக்களுக்கு இவைகளின் அடிப்படை தத்துவம், நிர்வாகம் இவைகளைப்பற்றி போதிய பயிற்சி அளிக் கப்படவேண்டும்.

கூட்டுறவாளர்களும் பொதுமக்களும் எதிர்காலத்தில் தங்களிடம் ஒப்படைக்கப்படவிருக்கும் பொறுப்புக்களை யுணர்ந்து, அவைகளை நிறைவேற்ற தகுந்த முறையில் தங்களை தயார் செய்துகொள்ளவேண்டும்.

இதையே நாமும் கருத்தில்கொண்டு, பல நாடுகளிலுள்ள கூட்டுறவு விவசாய முறைகளைப்பற்றியும், விவசாயமும் கூட் டுறவும் இணைந்து எப்படி முன்னேறலாம் என்பதைப்பற்றி யும் பல கட்டுரைகளை துடர்ச்சியாக வெளியிட ஏற்பாடு செய் துள்ளோம். நேயர்கள் பெரிதும் விரும்புவார்கள் என எதிர் பார்க்கிறோம்.

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

1. தாங்கள் பயிர்த்தொழில் பத்திரிகையின் சந்தாதாரரா என்றறிய சென்னை தபால் இலாகாவிலிருந்து ஒரு கடிதம் வரும். தாங்கள் சந்தாதாரர் என்று அதற்குப் பதில் தாமதமின்றி எழுதி அனுப்பினால்தான் பத்திரிகை யை வாராவாரம் வெளியிட்டு அனுப்ப முடியும். ஆகவே உடன் பதில் எழுதி நமக்கும் தெரிவிக்க கேட்டுக்கொள்ளுகிறோம்.

2. முன் பிரதிகளைக் கேட்டு பல நேயர்கள் கடிதம் எழுதிவருகிறார் கள். முன் பிரதிகள் கைவசம் இல்லையென்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

3. பழைய கிருஷிகன் சந்தாதாரர்களுக்குமட்டிலும் 15—7—56க்குள் 2-வது இதழில் குறிப்பிட்ட தங்கள் (ஓராண்டு) சந்தா பாக்கியை அனுப்பி னால் கிருஷிகன் பௌண்டன் பேனா இனாம் அனுப்புகிறோம். தபால் செல வுக்கு அனுப்பாவிட்டால் NOT PAIDல் அனுப்புகிறோம், தபால் செலவு 6 அல்லது 8 அணா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4. 31—7—56-க்குப்பிறகு பேனா சலுகை ரத்து செய்யப்படும். விபரங்களுக்கு உடன் பதில்.

மானேஜர் "பயிர்த்தொழில்"

முன்னேற்றப்பாதையிலே நாம்—!

முன்னுரை

நமது பாரத நாடு சுதந்திரம் அடைந்து 9 ஆண்டுகள் பூர்த்தியாகியும், முதல் ஐந்தாண்டு திட்டம் முடிவடைந்தும், நாம் பூரணமாக வறுமை, பஞ்சம், பட்டினியிலிருந்து விடுதலை பெறவில்லை. இந்தியா விவசாயத்தையே தொழிலாகவுடைய, விவசாயிகளையே அதிகம்கொண்ட மாபெரும் விவசாய நாடு. ஆகவே, வறுமை பஞ்சம், பட்டினி தீர்ந்து—தொழில் வளர்ந்து, பொருளாதாரம் விருத்தியாகி, அரசியல் சமூக பிணக்குகள் ஒழிந்து, ஒற்றுமையுடன் .சுபிக்ஷவாழ்வு எய்தவேண்டுமானால் விவசாயம், விவசாயி, கிராமங்கள் முன்னேறவேண்டும். இதையே கருத்தில் கொண்டுதான் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கிராமங்கள், விவசாயம், விவசாயி முன்னேற பல திட்டங்கள் பல கோடி ரூபாயில் வகுத்துள்ளது நமது சுதந்திர சர்க்கார்.

இன்று சமூகநல தேசிய விஸ்தரிப்பு— விவசாய விஸ்தரிப்பு திட்டங்களின்கீழ், சுமார் 10000 அதிகாரிகளும் விவசாய ஆராய்ச்சி கூடங்கள், கலாசாலைகள், பள்ளிகள், பண்ணைகளில் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் நமது முன்னேற்றத்திற்காக சேவைசெய்து வருகிறார்கள். பெரிய அணைகள் கட்டி வீணுகும் ஜலத்தை விவசாயத்துக்கு பயன்படுத்த பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் உருவாக்கி வருகிறார்கள். விஞ்ஞான, இயந்திர உதவியால் பாதாளத்தில் தேங்கி கிடக்கும் தண்ணீரை மேலே கொண்டுவந்து உபயோகப்படுத்த உதவிசெய்து வருகிறார்கள். பல நூதன, சிறந்த விவசாயக்கருவிகள், இயந்திரங்கள். விதைகள், உரம், மருந்து முதலியவைகளும் கண்டுபிடித்து கொடுக்கிறார்கள்.

இப்படி பல கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பல திட்டங்களை வகுத்து, விவசாயம், விவசாயி கிராமங்கள் முன்னேறி சுபிக்ஷ நிலைமை அடைய சர்க்கார் எடுத்துவரும் முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் அத்திட்டங்களை நாம் நன்கு-புரிந்துகொண்டு அவர்களுக்கு நமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிப்பதின்மூலம்தான் சாத்தியமாகும்.

எனவே சுபிக்ஷநிலைமையை நோக்கி முன்னேற்றப் பாதையிலே இட்டுச்செல்லும் சுதந்திர சர்க்கார் நமக்காகவகுத்துள்ள திட்டங்களைதெரிந்து கொள்ளவும், விவசாயி, விவசாயம் கிராமங்கள் முன்னேறி சுபிக்ஷ நிலைமையை எய்த சுதந்திர சர்க்கார் நமக்காக வகுத்துள்ள பல திட்டங்கள் ஆராய்ச்சிகள்—சேவைகள் ஆகியவைகளை தெரிந்துகொள்ளவும், அதன் மூலம் பயிர்த்தொழில் விருத்தியாகி, உற்பத்திபெருகி, பொருளாதாரம் உயர்ந்து நாமும், கிராமங்களும் சுபிக்ஷமடைய முன்னேற்றப்பாதையிலே நாம் செய்யவேண்டிய கடமையை விளக்குவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

(A. S, வெங்கட்ராவ், ஆசிரியர்.)

1. பலமநேரி கால்நடை பண்ணை.

இப்பண்ணையானது சித்தூர் ஜில்லாவில் சித்தூர்-பெங்களூர் ரோட்டில் பலமநேரிக்கு 2 மைல் தூரத்தில் இருக்கிறது. இப்பண்ணையின் விஸ்தீரணம் 20 ஏகர்கள். இப்பண்ணைக்கு அருகில் "கவுந்தண்யா" நதி ஓடிக்கொண்டிருக்கிறது.

இப்பண்ணை பழைய புங்கனூர் ஜாதி பசுக்களை விருத்தி செய்வதற்கென்றே ஆந்திர சர்க்காரால் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இங்கு இப்போது பழைய புங்கனூர் வகையைச் சேர்ந்த 20 பசுக்கள் பொருக்கியெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகிறது.

(புங்கனூர் குட்டை) வகையென்பது பசுமாடுகளில் மிகச்சிறந்தது. இம்மாடுகள் உருவத்தில் மிகச்சிறியது. மற்றஜாதி மாடுகளைவிட சிறியது. ஆடுகளைவிட கொஞ்சம் பெரியது-சாதாரணமாக தினம் 1-க்கு 0—8—0 தீனிச்செலவு செய்தால் 2 படி பால்வரை கொடுக்கும்.

இந்த ஜாதி பசுக்கள் சித்தூர் ஜில்லாவின் பொக்கிஷம் என்றே சொல்லலாம். புங்கனூர் சமஸ்தான ஜாகிர்தார்களால் வளர்க்கபபட்டு சுமார் 30—40 ஆண்டுகளுக்கு முன்வரை கலப்பின்றி தனி ஜாதியாக பரிபாலிக்கப்பட்டு வந்தது.

இந்தஜாதி பசுக்கள் ஆதியில் கர்நூல், கடப்பை, பெல்லாரி, அனந்தபூர், சித்தூர் ஜில்லாக்களில் தான் விசேஷமாக உற்பத்தியாகி வளர்க்கப்பட்டு வந்தது. அந்த பிரதேசங்களில் வரட்சியேற்படுங்காலங்களில் மேய்வுக்காக வெளி ஜில்லாக்களை நாடி சென்றுவிடும். இவ்விதம் செல்லும் காலங்களில் அங்குள்ள ஜாதிகளுடன் கலந்துபோனதால் தனிஜாதி கிடைப்பது அரிதாகிவிட்டது.

இவ்வளவு உயர்ந்த குணாதிசயங்களுடைய இச்சாதி பசுக்களை அபிவிருத்திசெய்யும் நோக்கத்துடன் இப்பண்ணை ஆரம்பிக்கப்பட்டு, இப்புங்கனூர் குட்டை பசுக்களைப்பற்றிய ஆராய்ச்சி அபிவிருத்தி நடைபெற்று வருகிறது. இதன்பயனாய் மீண்டும் புங்கனூர் பசுக்களின் ஜாதி அபிவிருத்தியடைந்து தென்னிந்தியாவின் கால்நடைச் செல்வம் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கலாம்.

2. தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பொரேஷன்

இது அமெரிக்காவிலுள்ள டென்னசி பள்ளத்தாக்கு கார்ப்பொரேஷன் போன்றது. இக்கார்பொரேஷனின் நிலவளப்பாதுகாப்புப் பகுதி சுமார் 3 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டது. அது முதல் அப்பகுதிகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

விஸ்தரிப்பு திட்ட ஊழியர்கள் விவசாயிகளுக்கு புதிய முறைகளை எடுத்துரைக்கின்றனர். புதிய முறைகளை கையாளும்படி தூண்டினார்கள். ரசாயன உரங்களை உபயோகிக்கச் சொன்னார்கள். மாற்றுப்பயிர் முறைகளை எடுத்துக் கூறினார்கள். விஸ்தரிப்பு திட்ட ஊழியர்கள் கிராமத்தில் குடியேறி தங்கள் வேலை தொடங்கியபோது விவசாயிகள் அவர்களை நம்ப

விவசாயிகளுக்கு பத்திரிகை அவசியமா?

(''ஜகன்''—ராமநாதபுரம்)

இன்னும் மூன்று மாதங்களில் நமது நாட்டின் 10-வது சுதந்திர ஆண்டு பிறக்கப்போகிறது. கத்தியின்றி ரத்தமின்றி போர்செய்து காந்திஜியின் தலைமையில் சுதந்திரம் பெற்று ஒன்பது ஆண்டுகள் கழிந்துவிட்டன. நாம் சுதந்திரப்போரில் வெற்றிகண்டும், மக்களின் வாழ்க்கைத்தரத்திலோ, பொருளாதார உயர்விலோ பூரண வெற்றி காண முடியவில்லை. அதற்கு நேர்மாராக உணவு உற்பத்திக் குறைந்தும் விலைவாசிகள் உயர்ந்துகொண்டும் இருக்கிறது. ஆண்டு முழுதும் உழைத்துக் கஷ்டப்பட்டாலும் பாட்டாளியின வயிற்றை நிரப்புவதே கஷ்டமாக இருக்கிறதென்றால் பூர்ண முன்னேற்றம் எப்படி காண முடியும். இதற்கொரு வழியும் இல்லையா? இல்லாமல் என்ன?

நமது நாடு மிகப்பெரிய விவசாய நாடு ஜனத்தொகையிலோ, உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு 5 மனிதனுக்கு ஒரு இந்தியன் இடம் பெருகிறான். விவசாயத்தொழில் செய்துவருபவர்கள் 100-க்கு 75 பேர். ஆகையால் நிலப்பரப்பிலோ, ஆள் பலத்திலோ குறைவில்லை. ஆனால் அந்நிய ஆட்சியில் கண்மூடித்தனமாக எந்த உழைப்பை அலக்ஷியம் செய்து வந்தோமோ அதே முறையை இன்னமும் பின்பற்றி வருகிறோம் கடமையில் மாறுதல் இல்லாமல் சுகபோகத்தில் மாறுதல் பெற விரும்புவது எட்டாப்பழத்திற்கு ஆசைப்படுவதுபோலாகும்.

விவசாயிகளாகிய உங்களைமட்டும் குறைகூறி பயன் இல்லை. உங்களுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு கிராமங்களில கற்றவர்கள் குறைவு; அதிலும் நம தேசத்தின் உயிர்நாடியாகிய கிராமங்களில் வாழ்க்கை நடத்தி தாங்கள் அறிந்ததை விளக்கிக் கூறுவோரின் எண்ணிக்கை மிக மிக

வில்லை. ஆனால் விளைவு பெருகவே நம்பிக்கை எற்பட்டது. புதிய முறைகளை அறிந்து, ரசாயன உரங்களை உபயோகித்தால் ஒரு விவசாயிக்கு அரை எக்கரில் 8 மூட்டை நெல் விளைந்தது. அவர் பயிர் செய்த 40 வருஷங்களில் இப்படி விளைந்ததேயில்லை. புதிய முறையில் விளைவு பெருகியதைக்கண்ட மற்ற விவசாயிகளும் புதிய விஞ்ஞானமுறைகளை தழுவ ஆரம்பித்து விட்டார்கள்.

இக்குறுகிய காலத்தில் புதிய முறைகளைப்பற்றி தீவிர முன்னேற்றம் எற்படாவிட்டாலும், புதிய முறைகளைப்பற்றிய வெறுப்பு மறைந்துவிட்டது. இப்புதிய முறைகளை வந்து பார்த்துப்போகும் விவசாயிகள் தங்கள் கிராமத்தில் தங்கள் வயலில் முன்னேற்ற வேலையை ஆரம்பித்து வருகிறார்கள்.

தாமோதர் பள்ளத்தாக்கு நில வள பாதுகாப்புப் பகுதி, விவசாயி, விவசாய முன்னேற்றத்திற்காக பல ஆராய்ச்சிகள் செய்துவருகின்றது. மண் அரிப்பினால் எற்படும் கேடுகளை ஆராய்கிறார்கள். மண் வளத்தைப் பாதுகாக்கும் முறைகளை ஆராய்கிறார்கள். உரங்களால் எற்படும் நன்மையை கூறுகிறார்கள். பலவித மரங்களை வளர்க்கிறார்கள், மீன் பண்ணைகளின் மூலம் மீன்களை வளர்க்கிறார்கள். இப்படி பல துறையிலும் முன்னேற உழைத்து வருகிறது தாமோதர் பள்ளத்தாக்கு நிலவள பாதுகாப்பு பகுதி.

குறைவு; அப்படி 1000ல் ஒரு மனிதன்தான் கிடைத்தாலும் அவருடைய அந்த சேவையை பயன்படுத்திக்கொள்ள தவறிவிடுகிறோம் அதனாலேதான் இன்றைய இந்த நிலை

முதல் ஐந்தாண்டு திட்டம் முடிந்து, இரண்டாவது ஐந்தாண்டுதிட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதை பயன்படுத்திக்கொள்ள நம்மில் எத்தனை பேர் எவ்வளவுதூரம் இத்திட்டத்தை புரிந்துகொண்டிருக்கிறோம்; புரிந்து கொள்ள வசதியிருக்கிறது; இன்னும் என்ன வசதி தேவை என்பதை சிந்தித்து பார்க்கவேண்டும்.

ஒரு சினிமாத் துறையில் இன்று எவ்வளவு பத்திரிகைகள் புத்தகங்களை பார்க்கிறோமோ அதில் 100-க்கு ஒன்றுகூட நம் தேசத்து உயிர் நாடியாகிய விவசாயத்தொழிலைப்பற்றிய புத்தகங்களோ, பத்திரிகைகளோ இல்லை யென்று கூறிவிடலாம். அப்படி இருக்கும் சிலவும், ஆங்கிலம், ஹிந்தி பாஷையில் உள்ளன. பரந்த தமிழ் நாட்டிலே உள்ள ஒன்றிரண்டு தமிழ் பத்திரிகை, புத்தகங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இந்தநிலைமையிலே ஆரம்பமாகப்போகும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டமோ விவசாயிகளுக்கெனவே ஆரம்பிக்கப்படும் திட்டம். விவசாயிகளுக்கென்றே கிராமங்களிலிருந்தே ஆரம்பிக்கப்படப்போகும் இத்திட்டம் வெற்றிபெற, இத்திட்டங்களின் பூரா பயனையும் விவசாயிகள் அடைய, பயிர்த்தொழில் போன்ற பத்திரிகைகள் பல தேவை.

சர்க்காரின் திட்டங்கள் என்ன, என்னென்ன துறைகளில் சர்க்கார் ஈடுபடப்போகின்றனர். அதை விவசாயிகளாகிய நீங்கள் எப்படி அடைந்து பயன் பெறலாம் என்பவை போன்ற பல செய்திகளை திரட்டி தருவதே விவசாயப்பத்திரிகையாகும்.

மேலும் விவசாய இலாகாவினால் செய்யப்பட்டுவரும் ஆராய்ச்சிகள் பல. உரம், விதை, கருவிகள், திருந்திய முறை, பூச்சிநோய் பாதுகாப்பு சம்பந்தமாக கிடைத்துவரும் பல அரிய முடிவுகளை உங்களிடைபே பரப்ப உங்களுக்கென ஒரு "பயிர்த்தொழில்" முன்னேற்றப் பத்திரிகை அவசியமல்லவா?

தவிரவும் விவசாயிகளாகிய உங்களிடையே உங்கள் கருத்துக்களை தெரிவித்து அறியவும்; உங்கள் சொந்த அனுபவம், குறைகள், தேவை ஆகியவைகளை சர்க்காருக்கு தெரியப்படுத்தவும், அதற்கு வேண்டுவன செய்யவும் உங்கள் குரலுக்கு ஈடான ஒரு பத்திரிகையும் தேவையல்லவா?

இன்று அமெரிக்கா, சைனா, ஆஸ்ட்ரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளின் முன்னேற்றத்திற்கு காரணம் அங்குள்ள மக்களின் விழிப்பும், அவர்களுக்குள்ள வசதிகளும்தான். ஆகவே நாட்டின் பெரும்பகுதியும்—முதுகெலும்புபோன்ற விவசாயிகளாகிய உங்கள் தொழில், பொருளாதாரம், வாழ்க்கை உயர நீங்கள் ஆற்றவேண்டிய பல கடமைகளுள் மிக முக்கியமானது விவசாய (பயிர்த்தொழில்) பத்திரிகைகளை படிப்பதும், அவைகளை ஆதரிப்பதுமாகும் என்பதே எனது கருத்தும் வேண்டுகோளும்.

வாழ்க பயிர்த்தொழில்! வளர்க "பயிர்த்தொழில்"!!

"பயிர்த்தொழில்" சந்தாதாரராக பதிவு செய்து கொண்டீர்களா? இல்லையேல் இன்றே உங்கள் சந்தாவை அனுப்பிவையுங்கள்.

பயிர்த்தொழில் குறிப்பும் திரட்டும்

(முன் இதழ் 16-ம் பக்கத் தொடர்ச்சி)

(42) சராசரி பால் உற்பத்தி எவ்வளவு?

உயிரளிப்பது நெல்; ஊட்டமளிப்பது பால்; உலக கால் நடையில் 3ல் 1 பாகம் இந்தியாவில் இருக்கிறது. இருந்தாலும் பாலில் பற்றுக்குறை என்? பால், பால்பொடி இறக்குமதி, கலப்பு பால் வியாபாரம் இவைகள் என் என்று தெரிந்துகொள்ளவேண்டாமா? இதோ பாருங்கள்!

பெயர்:	ஆண்டொன்றுக்கு சராசரி 1 பசுவிலிருந்து கிடைக்கும் பால்.			
ஹாலந்து	,,	,,	7559	ராத்தல்
டென்மார்க்	,,	,,	7005	,,
ஸ்விட்சர்லாந்து	,,	,,	6498	,,
இங்கிலாந்து, வேல்ஸ்	,,	,,	5576	,,
ஜர்மனி	,,	,,	5306	,,
நியூஜீலந்து	,,	,,	5118	,,
கானடா	,,	,,	3195	,,
இந்தியா—எருமை	,,	,,	1270	,,
பசுமாடு	,,	,,	525	,,

(43) பருத்திக்கு அம்மோனியம் சல்பேட்.

பருத்தி சாதாரணமாக பயிரிட்டதில் ஏகர் 1-க்கு 1000 ராத்தல் கிடைத்ததாம். 200 ராத்தல் அம்மோனியம் உரமிட்டதில் 1850 ராத்தல் கிடைத்ததாம். 200 ராத்தல் அம்மோனியம் விலை ரூ. 40. 850 ராத்தல் பருத்தி விலை 210 ரூபாய். அம்மோனியம் உரமிட்டதால் கிடைத்த நிகர லாபம் ரூ. 170 என்கிருர் ஒரு விவசாயி.

(44) பருத்தியில் மருத்தாம்பு.

கரும்பைப்போல் பருத்திச் செடியையும் மறுபோகத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்பது பல விவசாயிகளுக்குத் தெரியும். ஆனல் பருத்திச் செடியை அப்படியே விட்டுவைப்பது சரியான முறையல்லவாம். இதனல் பூச்சிகள் விருத்தியாகி சேதம் விளைவிக்க கூடுமாம். ஆகவே வைகாசி, ஆனி மாதத்தில் கோடைமழை ஆரம்பமாகும் சமயத்தில், முதல் (மகசூல் முடிந்தவுடன்) தரைமட்டத்திற்கு 8 அங்குலத்திற்குமேல் செடியின் நடுத் தண்டு, பக்கக்கிளைகள் இவைகளை வெட்டிவிட வேண்டும். வெட்டிய தூர்களை கம்போஸ்டு உரமாக செய்துக் கொள்ளலாம். பிறகு மழை பெய்யும் தருவாயில் 1 அந்தர் அம்மோனியம் சல்பேட்டை செடிக்கருகில் தூர் பக்கத்தில் வைத்து மண் அணைத்து விடவேண்டும். மழை பெய்த உடனே செடிகள் நன்கு தழைத்து நல்ல மகசூலும் கொடுக்கிறதாம்.

(45) சம்பளமில்லாத தொழிலாளிகள்!

சம்பளமில்லாத தொழிலாளி ஒய்வில்லாத வேலை செய்கிறான் என்றால் ஆச்சரியமல்லவா?. 24 மணிநேரமும் ஓயாது வேலைசெய்கிறான். விவசாயின் நிலத்தை பண்படுத்துகிறான். அவன் யார்? மண்ணுணி பூச்சி என்பதுதான் அவன் பெயர். இப் பூச்சிகளால் பண்படுத்தப்பட்ட நிலத்தில் 5% தழைச்சத்து 7% தான்யசத்து 11% உப்புசத்து அதிகமாகிறதாம். ஒரு செடியை சுற்றி இப்பூச்சிகளை துவாரம் செய்து விட்டுவிட்டால், அச் செடி நன்கு வளர்ச்சியடைந்து நல்லபலன் தருகிறதாம். 10—15% அதிக மகசூல் கொடுக்கிறதாம். 50 ஆயிரம் புழுக்கள் ஒரு மாசத்தில் 9 கன அடி மண்ணை பண்படுத்துகிறதாம். அமெரிக்காவில் டாக்டர் பாரட் என்பவர் 10 லக்ஷம் மண் புழுக்களைக் கொண்டே 1 எகர் நிலத்தை பண்படுத்தி காய் கறி உற்பத்தி செய்துவருகிறாராம்.

அமெரிக்காவில் மண்புழு உற்பத்திக் கெனவே பல பண்ணைகள் உண்டு. அதிலிருந்து ஆண்டுதோறும் லக்ஷக்கணக்கான பூழுக்கள். நார்வே, டென்மார்க், ஆஸ்திரியா, நியூஜிலாந்து, கானடா, அலாஸ்கா முதலிய இடங்களுக்கு கப்பல் மூலம் ஏற்றுமதிச்செய்யப்படுகிறதாம். என்னே! இச்சம்பளமில்லாத தொழிலாளிகளின் சேவையும் தேவையும்.

(46) குறுகிய காலநெல் தினுசுகள்.

நவரை (ஜனவரி—மார்ச்சு) கோடை எப்ரல்—ஜூன் காலத்தில் நெல் சாகுபடிசெய்ய விரும்புபவர்களுக்கு எற்ற குறுகிய காலநெல் வகைகளாவன

			வயது நாட்கள்.
ஆடுதுரை	9	பூங்கார்	115
ஷை	12	சித்திரக்காளி	110
	20	கிராஸ் குருவை	105
கோவை	13	அறுபதாங்கோடை	100
சயாம்	3	... ...	93
கோ.	20	தெல்ல சன்ன வட்லு	120
மாருதேரு	9	கரிக சன்னவாரி	...
	15	தால்வா சன்னம்	...
பாலூர்	1	பாலூர் சொர்ணவாரி	100
T. K. M.	6	திரூர் குப்பம் சொர்ணவாரி	105

(47) கரும்பை வெட்டும் காலம்.

பண்ணிய பயிரில் பலன் தெரியவேண்டுமானல் சரியான சமயத்தில் அறுவடை செய்யவேண்டும். முந்தியே அறுவடை செய்தலும் பிந்தி அறுவடை செய்தலும் நஷ்டத்திற்கு அறிகுறிதான். உதாரணமாக C. O. 419 கரும்பை நட்டு 12 மாதம் ஆனபிறகுதான் வெட்டவேண்டும். இதற்கு முந்தியே வெட்டினல் தரம். குணம், விளைவு, குறைவுபடுகிறதாம். நன்கு முதிர்ந்த கரும்பை வெட்டுவதானல் சராசரி எக்கருக்கு 75—80 டன் கரும்பும் 8—9 டன் வெல்லமும் (36—40 பாரம்) கிடைக்கிறதாம். தவிர

கரும்பின் எடைக்கு 11·59—12 சதம் வெல்லமும் கிடைப்பதாக பரிசீலனையிலிருந்து தெரியவருகிறது.

(48) பூவரசு மரம் உற்பத்திச்செய்ய சிக்கனமான வழி.

விவசாயிகள் சாதாரணமாக முதிர்ந்த கொம்புகளை (5'-6' அடி நீளம்) செங்குத்தாக நடுவது பழக்கம். ஆனால் புதிய முறைப்படி 1'' அங்குல கனமுள்ள கொம்புகளைக்கூட 2 அடி நீள துண்டுகளாக நறுக்கிக்கொண்டு, கரும்பு நடுவதுபோல் மண்ணில் மூடிவிடலாம். இக்கட்டைகள் துளிர்த்து செங்குத்தாக பல கிளைகள் உண்டாகின்றன. இம்மாதிரி உற்பத்தியான மரங்களில் செங்குத்தான கிளைகள் நட்ட மரங்களில் ஏற்படுவதுபோல் (போரை) சாக்காடு ஏற்படுவதில்லை- 100க்கு 95 கிளைகள்கூட உற்பத்தியாகி விடுகின்றனவாம்.

(49) அமெரிக்காவின் அற்புத டென்னசி பள்ளத்தாக்கு.

இதன் பரப்பளவு 41,000 சதுர மைல் இதன் நீர் வீழ்ச்சிகளின் உயரம் 300 முதல் 3000 அடி. தண்ணீர் நிற்கும் பரப்பளவு 1,75,000 எக்கர். 1200 மைல் ரோடுகளும், 140 மைல் நீள ரயில் பாதையும் உண்டு. 5 கோடி கன கஜம் பாறைகள் தோண்டப்பட்டிருக்கிறது. 11 கோடி 30 லக்ஷம் கன கஜம் காங்ரீட்டும் போடப்பட்டுள்ளது. (இது ஈஜிப்டில் உள்ள எழு கோபுரங்களைப்போல் ஏறக்குறைய 12 மடங்கு ஆகும் என கூறப்படுகிறது.

(50) சீமை வேலன் (உயிர்) வேலி.

சீமை வேலன் வேலிக்கேற்ற மரங்களில் மிக முக்கியமானது என்பது யாவரும் அறிவர். இதிலுள்ள கஷ்டம் காயிலிருந்து விதையை பிரிப்பது தான். இப்போது விதையை பிரிக்காமலேயே செடியை உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று தெரியவருகிறது. அதாவது பருவமழை ஆரம்பத்தில் தேவையான நீளத்திற்கு 1' அடி அகலம் 1' அடி ஆழம் கால் வெட்டி பண்படுத்தி, மண் நிறப்பி, 1—2 அங்குல ஆழத்தில் ஊன்றினால் 2—3 மாத காலத்தில் முளைத்துவிடுகிறதாம். செடிகள் நெருக்கமாக தேவையானால் காய்களை 2 வரிசையாக நடலாம். இதனால் நல்ல பலன் கிடைத்திருக்கிறதாம்.

(51) தகரக்கொட்டகைகளுக்கு பெயின்டு.

வெய்யலிலும் மழையிலும் விடாது காய்ந்து நனையும் எஞ்சின், மாட்டு கொட்டகைகளுக்குச் சாதாரண பெயின்டு அடிப்பதற்கு அதிகச்செலவு ஆவதுடன் வெடித்தும் போய்விடுகிறது. ஆகவே 14 ராத்தல் சிமிண்டையும் 6 பாட்டில் ஆளிவிதை எண்ணை (Linceed oil)யும் சேர்த்து கலந்து தகரத்தின்மேல் பூசினால் துருப்பிடிக்காமல் வெகுநாள் தாங்குகிறதாம்.

(52) எலுமிச்சம்பழத்தை கெடாமல் வைக்கும்வழி.

எலுமிச்சம்பழமோ உயர்ந்த சத்துள்ள பொருள்—நமக்கு அடிக்கடி தேவையாக இருக்கிறது. தினமும் கிடைக்கிறதா? கிடைப்பதில்லை. வாங்கி வைத்தாலோ காய்ந்துபோகிறது; இதற்கு என்னசெய்யலாம்?

ஒரு மட்பாண்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் உலர்ந்த சிறு மணலைக்கொட்டி எலுமிச்சம்பழங்களை ஒன்றுக்கொன்று படாமல் அதில்

புதைத்து மேலும் கொஞ்சம் மணலைப்போட்டு நன்றாகமூடி வையுங்கள். தேவையான போது எடுத்துக்கொள்ளலாம். பழம் சிறிது காய்ந்து போயிருந்தாலும் எறிந்து விடாமல் கொதிக்கும் ஜலத்தில்போட்டு எடுத்தால் போதுமான ரசம் கிடைக்கும். இப்போது பாருங்கள எவ்வளவு சுலபமாக வும் சிக்கனமாகவும் இருக்கிறதென்பதை.

(53) காலிடின்களை சுத்தப்படுத்தும் முறை.

காலி வார்னீஷ், எண்ணை டின் அல்லது டிரம் நமக்கு பல விதத்திலும் உபயோகப்படுகிறது. ஆனால் அவைகளை நன்றாக கழுவி சுத்தப்படுத்த வேண்டும். இதற்கு சுலபமானவழி ஒன்றுண்டு. அதாவது காலிடின அல்லது டிரம் வாய்புறம் மேலிருக்கும்படி ஒரு தண்ணீர் தொட்டியில் வைத்து அதன்மேல் ஒரு பாரம் வைக்கவேண்டும். பிறகு காகிதம் அல்லது கந்தல் துணியை கொளுத்தி உள்ளே போடவேண்டும் அப்போது உள்ளே இருக்கும் பெயிண்டு அல்லது எண்ணை எரிந்து சுத்தமாகிவிடும். ஆனால் சயப்பற்று உருகாது. பிறகு அவைகளை சுத்தமாக கழுவி எடுத்துக்கொள்ள லாம்.

(54) உடைந்த வண்டிச்சக்கரத்தின் உபயோகம்.

பழைய உடைந்துபோன சக்கரத்தின் (விட்டம்) வட்டைகளை நீக்கி ஒன்றுவிட்டு ஒன்று ஆரக்காலை நீக்கிவிட்டு, 3 அடி உயரத்தில் ஒரு கம்பம் நட்டு அதில் பொருத்திவிட்டால் ஒரு சுழல் கேட்மாதிரி ஆகிவிடும். ஆடு மாடுகள் புகாமல் தடுக்கும்—மனிதர்கள் மட்டும் போகலாம்.

(55) கரையானை அழிப்பதற்கு மருந்து.

கரையான் (White ant) ஒரு சிறிய ஜந்து. ஆனால் அதன் சக்தியோ அபாரம்—அதனால் ஏற்படும் நஷ்டமோ அளவிடமுடியாது. அதை ஒழிப் பது எப்படி என்பது தான் பிரச்னை. ஆடாதொடையிலையை காயவைத்து பொடியாக்கி ராத்தல் 1-க்கு 1 காலன் வீதம் ஜலம்விட்டு 2 மணிநேரம் கொதிக்கவைத்து கஷாயம் இறக்கிக்கொள்ள வேண்டும். பிறகு புத்து ஒன்றுக்கு 4 காலன் வீதம் இந்த கஷாயத்தை உபயோகித்தால் கரையான் கள் மடிந்துவிடுகிறதாம். இதைச்செய்து பாருங்கள். எவ்வள சிக்கன மானதும் உபயோகமானதென்று.

(56) வெப்பம்பாசியை அழிப்பதெப்படி?

வேப்பம்பாசி விழும் வயலுக்கு ஆடாதொடை இலையை தழை உரமாக உபயோகித்தால் வேப்பம்பாசி அழிந்து போவதுடன் உண்டாவதே யில்லை யாம். இதை பரீக்ஷைசெய்து பார்க்கவிரும்பினால் ஷை பாசியை ஒரு தொட்டியில் போட்டுவைத்து ஆடாதொடை சாரைப்பிழிந்து கலந்துவைத் தால் அது அழிந்து போவது நன்றாக தெரியுமாம்.

(57) நெல்லிக்காயும் ஆரஞ்சுப்பழமும்.

ஒரு நெல்லிக்காய் ஆரஞ்சுப்பழத்தைவிட எவ்வளவோ சிறியது: மலி வானதும்கூட ஆனால் ஒரு நெல்லிக்காயில் 2 ஆரஞ்சுப்பழத்தில் உள்ள (வைடமின்) சத்தும், ஆரஞ்சு ரசத்தைவிட நெல்லிக்காய் ரசத்தில் 10 மடங்கு (C வைடமின்) சத்தும் இருக்கிறதாம். நெல்லிக்காய்களை தான்

செய்து வைத்துக்கொண்டாலும், உப்புநீரில் ஊறு காய்போட்டு வைத்தாலும் பல மாதங்கள் கெடாமல் இருக்கும்.

(58) சக்கரைவள்ளியும் உருளைக்கிழங்கும்.

வள்ளிக்கிழங்கு ஏழைகளின் உணவு; உருளைக்கிழங்கு பணக்காரர்களின் உணவு; வள்ளிக்கிழங்கு விலை மலிவானது; உருளைக்கிழங்கு விலை உயர்ந்தது; உருளைக்கிழங்கு உயர்ந்த மலைப்பிரதேசங்களில் தான் விளைகிறது. வள்ளிக்கிழங்கு தாழ்ந்த உஷ்ணப்பிரதேசத்தில் விளைகிறது. இருந்தாலும் உருளைக்கிழங்கைவிட வள்ளிக்கிழங்கு மிகுந்த ஊட்ட சத்துள்ள வஸ்து என்றால் நம்புவீர்களா? இதோ பாருங்கள்!

	ஈரம்.	கொழுப்பு.	புரதம்.	கார்போஹைட்ரேட்	சாம்பல்	கலோரி
உருளைக்கிழங்கு.	77·8	2·0	0·1	19·1	1·1	385
வள்ளிக்கிழங்கு	68·5	1·8	0·7	27·9	1·1	565

ஒரு ருத்தல் எடையிலுள்ள சத்து

	வைடமின் A.	வைடமின் B.	கால்சியம்	பாஸ்பாஸ்	இரும்பு சத்து.	மாங்கனீஸ்
உருளைக்கிழங்கு	160	50	0·06	0·29	9·10	1·40
வள்ளிக்கிழங்கு	360	50	0·10	0·23	7·7	4·4

(59) வள்ளிக்கிழங்கை நீண்டநாள் வைப்பதெப்படி?

வள்ளிக்கிழங்கு ஊட்டசத்துள்ள ஏழைகளின் உணவப் பொருள். ஆனால் கெட்டுப்போகக் கூடியது. அதை நீண்டநாள் வைத்துக்கொள்ள முடியுமானால் மிகுந்த நன்மையுண்டல்லவா? அதற்கான வழி இதோ பாருங்கள்:—

(a) நன்றாய் முற்றின வள்ளிக்கிழங்கை வெட்டி எடுத்து நிழலில் காற்றாட வைத்திருந்து உலர்ந்த மணலை கனமாகக் கொட்டி நிரவி அதன் மேல் கிழங்கை வரிசையாக அடுக்கவேண்டும். இவ்விதமே ஒருவரிசை மணல், ஒருவரிசை கிழங்கு, ஒரு வரிசை மணல் இப்படியாக அடுக்கடுக்காக அடுக்கிவைத்திருந்தால் பல மாதங்கள் கெடாமல் இருக்கும் இப்படி செய்துக் கொள்வதினால் எக்காலத்திலும் கிழங்கு கிடைக்குமல்லவா?

(b) மரப் பீப்பாய் ஒன்று எடுத்துக்கொள்ளவேண்டும், கட்டி, குச்சி முதலானவை இல்லாத சாம்பல் வேண்டும். 4 அங்குல கனத்திற்கு சாம்பல் கொட்டி நிரவிக்கொண்டு அதன்மேல் முன் சொன்னமாதிரி கிழங்குகளை அடுக்கவேண்டும். பிறகு சாம்பல் கொட்டவேண்டும்; பிறகு கிழங்கை வரிசையாக ஒன்றுக்கொன்று படாமல் அடுக்கவேண்டும். அதன்மேல் சாம்பலைக் கொட்டி மூடவேண்டும் இம்மாதிரியே பீப்பாய் நிறைய அடுக்கி மூடி வைத்துக்கொள்ளலாம் இதுவும் பல மாதங்கள் கெடாமல் இருக்கும்.

(c) புதிய கிழங்கை எடுத்து தண்ணீரினால் சுத்தமாக கழுவவேண்டும். மேல் தோலை நீக்கவேண்டும். வெண்மையான கிழங்கை துருவல் மணையில் துருவி எடுத்துக்கொள்ளவேண்டும். காற்று பட்டால் துருவல் கருமையாக

மாறிவிடக்கூடுமோதலால் சோடியம் ஹைட்ரோ சல்பேட் (Sodium Hydro Sulphate) கலந்த தண்ணீரில் துருவலை போட்டு வைத்திருந்து பிறகு ஜலத்தை பிழிந்து ஒரு துணியின்மேல் வெய்யலில் காயவைத்துக்கொள்வதால் நிறம் மாறுவதில்லை. இப்படியே துருவலாகவோ, அல்லது மாவாக அறைத்தோ வைத்துக்கொள்ளலாம். நீண்டகாலம் கெடாமல் இருக்கும்.

(60) சர்க்கரை வள்ளிக்கிழங்கு (கார) கேக்.

(அ) அரை வீசை வள்ளிக்கிழங்கை வேகவைத்து தோலை நீக்கி கையினால் பிசைந்து பொடி செய்துகொள்ளவேண்டும். பிறகு கடுகு, உளுத்தம்பருப்பு, சிறிதளவு கடலைப்பருப்பு, துண்டுசெய்த வத்தல் மிளகாய், பச்சமிளகாய், முந்திரிப்பருப்பு, இவைகளை ஒருவாணலியில் எண்ணெய், டால்டா அல்லது நெய் போட்டு தாளிதம் செய்து அதில் வள்ளிக்கிழங்கு பொடியை போட்டு கிளறி தேவையான உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து கிளறி வைத்துக் கொள்ளவேண்டும். 8 பலம் கோதுமை அல்லது மைதாமாவை சிறிது உப்பு சேர்த்து பிசைந்து, அடைமாதிரி செய்து அதில் வள்ளிக்கிழங்கை எலுமிச்சம்பழம் அளவு வைத்து மாவினால் மூடி வாணலியில் எண்ணை அல்லது நெய் தடவி சுட்டெடுத்துக்கொள்ளவேண்டும்.

(ஆ) சர்க்கரை வள்ளிக்கிழங்கு (தித்திப்பு) கேக்.

அரை வீசை வள்ளிக்கிழங்கை வேகவைத்து தோல் நீக்கி முன்மாதிரி பொடி செய்துகொண்டு, கால் வீசை வெல்லத்தை கெட்டி பாகுசெய்து ஏலக்காய், ஜாதிக்காய் பொடி சேர்த்து அதில் வள்ளிக்கிழங்கைபோட்டு கிளறி, ஆட்டு உரலில் அரைத்து வைத்துக்கொண்டு முன்சொன்னமாதிரி மைதா அல்லது கோதுமை மாவினால்மூடி வாணலில் சுட்டு எடுத்துக் கொள்ளவேண்டும்.

(61) கறவைமாடும் மீன் எண்ணையும்

பால் கறக்கும் பசு, எருமை மாடுகளுக்குப் பச்சைபுல் தீவனம் கொடுத்தால் பாலில் A. (எ) வைடமின் அதிகம் விருத்தியாகிறது. பச்சைபுல் தீவனம் கிடைக்காத வரட்சியான காலத்தில், உணவுடன் மீன் எண்ணையை கலந்து கொடுத்துவந்தால் ஏ. வைடமின் சத்துள்ள பால் கிடைக்கிறதென தெரிகிறது.

காய்ந்த புல் தட்டுவகைகளை தீனியாகக்கொடுக்கும் காலத்தில் 10 கிறாம் வீதம் தினமும் ஷார்க் லீவர் (மீன்) எண்ணைக்கொடுத்துவந்தால் முன் சொன்ன மாதிரி (எ) வைடமின் அதிகமுள்ள பால் கொடுக்கிறது. இந்த பாலில் மீன் எண்ணையின் வாசனையோ குணமோ இருப்பதாகத்தெரியவில்லை.

(ICAR 49)

(62) எலுமிச்சம்பழத்தின் உபயோகங்கள்.

ஈறுவீக்கம், பல்வலி, இவைகளைப்போக்க வென்னீரில் எலுமிச்சை ரசத்தை சேர்த்து வாய்க்கொப்பளித்து வாலாம்; ஜலதோஷத்தை போக்க இதன் சாற்றைக்கலந்து குளித்து பிறகு வென்னீரில் கொஞ்சம் சாற்றை சேர்த்துக்குடித்தால் ஜலதோஷம் முறிந்து சளி சுலபமாக வெளியேறிவிடும். தலைவலித்தால் எலுமிச்சை சாற்றை நெற்றியின் இருபக்க பொட்டுகளிலும்

தேய்க்க தலைவலி தீரும். பித்தமயக்கம், கிறுகிறுப்பு உள்ளவர்கள் 48 நாட்கள் தினம் காலையில் நீராகாரத்தில் எலுமிச்சை ரசத்தை கலந்துகுடித்து வந்தால் கிறுகிறுப்பு, மயக்கம் தீர்ந்துவிடும். அதிக உஷ்ணம், அல்லது தளர்ச்சியினால் தாது (Somon) நஷ்டமாகிறவர்கள் பாதி எலுமிச்சம் பழத்தை தலையில் தேய்த்து குளிர்ந்த தண்ணீரில் குளித்துவர சரியாகிவிடும் முகப்பருக்கள் உள்ளவர்கள் இரவு காலங்களில் படுக்குமுன் எலுமிச்சை ரசத்தை தடவிக்கொண்டு, மறுநாள் காலையில் குளிர்ந்த தண்ணீரில் கழுவி வந்தால் ஒரு வாரத்தில் முகம் பளபளப்பாகிவிடும். இங்கி, இரும்புக்கறை கள் பட்டால் எலுமிச்சை ரசம் உப்புகலந்து கறைப்பட்ட இடத்தை ஊற வைத்து பிறகு துவைத்தால் கறைகள் மறைந்துவிடும். (ம இ. கூ. ப.)

(63) தழைச்சத்துள்ள இரண்டு புதிய உரங்கள்.

யூரியா :— இது அஸ்காபோன்ற வஸ்து. இதில் 45% தழைச்சத்து உண்டு. அதாவது 1 படி அம்மோனியாவில் உள்ள சத்தின் அளவைப் போல் இரண்டு பங்கு சத்து இருக்கும் ஒரு படி யூரியாவில் 100 ருத்தல் அம்மோனியா உபயோகிப்பதற்கு பதில் 44 ராத்தல் யூரியா போட்டால் போதுமானது. அம்மோனியாவைவிட இதுவே மிகவும சிக்கனமானதும் லாபகரமானதும் எனக் கருதப்படுகிறது. மேல் நாட்டில் இதை அதிகம் உபயோகிக்கிறார்களாம் ஈரத்தினால் பாதிக்கக்கூடியது ஆனபடியால் ஈரம் தாக்காதபடி வைத்திருக்கவேண்டும்

நைட்ரேட் :— அம்மோனியம் சல்பேட் நைட்ரேட் என்பது இதன் மறு பெயர். இதுவும் அம்மோனியாவைவிட அதிக தழைச்சத்துள்ள உர மாகும் 100 ராத்தல் அம்மோனியம் உபயோகிப்பதைவிட 77 ராத்தல் நைட்ரேட் உரம் போட்டால் போதுமானது. அம்மோனியாவைப்போல் புளிப்பாக்கும் குணம் இதில் குறைவு. இதையும் ஈரம் தாக்காமல் காபந்து செய்துவைத்திருக்கவேண்டியது அவசியம்.

(64) தென்னை நாற்று உற்பத்தி செய்தல்.

நீர்ப்பாசனத்திற்கு அருகிலுள்ள மணல் பாங்கான இடத்தில் தென்னை நாற்றுக்கள் விடுவது நல்லது. மணல் பாங்கான இடம் கிடைக்காத இடங் களில் ஒண்ணரை அடி ஆழத்தில் வேண்டிய பரப்பளவில் ஒரு குழி வெட்டி மண்ணை அப்புறப்படுத்திவிட்டு அதில் மணல் கொட்டி நிரப்பவேண்டும்.

பிறகு பொறுக்கி எடுத்த நல்ல நெற்றுக்களை நேராகவும், ஒன்றுக் கொன்று ஒண்ணரை அடி இடைவெளி விட்டும் நடவேண்டும். நெற்றுக் களில் முக்கால் பாகம் மண்ணிலும் கால்பாகம் வெளியில் தெரிந்துகொண் டும் இருக்கவேண்டும். ஜூன் ஜூலை மாதங்களில் நாற்று பரவுவதால் தண்ணீர் பாய்ச்சுவதை மிச்சப்படுத்தலாம். மழை பெய்யாவிட்டால் வாரத் திற்கு இரண்டு தடவை தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

நாற்றங்காலுக்கு உரம் போடக்கூடாது. உரம் போட்டால் கரை யான் வரலாம். அப்படி கரையான் வந்தால் 5% B. H. C. உபயோகப் படுத்தினால் நன்மை தரும்.

(முதல் பாகம் முற்றும்.)

(65) பொதினாக் கீரை உற்பத்தி.

புதினா அல்லது பொதினாக்கீரைக்கு ஈ எச்சமிட்டான் கீரை என்றும் ஒரு பெயர் உண்டு. ஈக்கள் எச்சமிடுவதிலிருந்து அது உற்பத்தியாவதால் அதற்கு அந்த பெயர் வந்திருக்கவேண்டும். ஒரு கஜ நீளமும் ஒரு கஜ அகலமும் உள்ள பாத்தியை நன்றாகக் கொத்தி, புழுதியாக்கி, பாத்திகட்டி, பாத்திக்குள் மடித்துப்போன வைக்கோலை இடைவிடாமல் பரப்பி, கருப்புக் கட்டியை (பனைவெல்லம்) தண்ணீரில் தேன்போல் கரைத்து, வைக்கோலின் பேரில் தெளித்துவைத்தால், ஈக்கள் வந்து மொய்த்து, வெல்லத்தண்ணீரை குடித்து அதில் எச்சமிட்டுப்போகும். மறுநாள் காலை அந்த எச்சத்தின பேரில் காய்ந்து மக்கின சாம்பல் எருவை ½ அங்குல கனத்திற்குத் தூவி, அதற்கு மறுநாள் பூவாளியினால் (Watering can) தண்ணீர் தெளிக்கவேண்டும். பிறகு தினம் ஒருமுறை ஒரு வாரத்திற்குத் தண்ணீர் தெளித்துவரவேண்டும். மக்கின வைக்கோலைவிட கிழிந்த பழைய கோணியை பாத்தியின் அகலத்துக்கு விரித்துவைப்பது நல்லது. மேற்கண்டவிதம் செய்து பார்த்தால் (ஈ எச்சமிட்டான்) பொதினாக்கீரை பயிராகும் எனக் கூறப்படுகிறது.

(66) வயலிலுள்ள நண்டுகளைப் பிடித்தல்.

நெல் வயலிலுள்ள நண்டுகள், நெல் நாற்றங்காலிலுள்ள (முளை கிளம்பி வரும்) இளம் நாற்றுகளை துண்டித்தும், புதிதாக நட்ட பயிர்களை கத்தரித்தும் சேதத்தை உண்டுபண்ணுகின்றன. இவ்வித சேதத்தைத்தடுக்க நண்டுகளைக் கொல்ல சுலபமான வழியாவது :—

ஏகர் 1-க்கு 5—6 வாயகன்ற மண் பானைகளை தரை மட்டத்திற்கு பள்ளம் செய்து புதைக்கவேண்டும். பிறகு அரிசி தவிட்டை வருத்துத் தண்ணீர் சேர்த்து உருண்டைகளாகச்செய்து பானை 1-க்கு 2, 3 உருண்டைகள்வீதம் போடவேண்டும். இதன் வாசனைக்கு நண்டுகள் வந்து பானையில் விழுந்து, வெளியேறமுடியாமல் அகப்பட்டுக்கொள்ளும். 2 தினங்களுக்கொருமுறை ஷை நண்டுகளை அப்புறப்படுத்தி அழித்துவிடவேண்டும்.

(67) முருங்கை மரமும் பெருங்காயமும்.

அதிகமாக பலன் தராத முருங்கை மரத்தின் வேருக்குப் பக்கத்தில் பூமியில் அரை அடி ஆழம் பள்ளம்செய்து அதில் ஒரு ராத்தல் பெருங்காயத்தைப்போட்டு மூடி தண்ணீர் ஊற்றிவந்தால் சிலகாலத்துக்கெல்லாம் மரத்தில் நல்ல காய்ப்பு ஏற்பட்டு பலன் தருமாம்.

(68) பழ மரங்களை சீக்கிரம் காய்க்கும்படி செய்தல்.

பழ மரங்களின் விதையிலிருந்து உற்பத்தி செய்யப்படும். எவ்வித கன்றையும் 6 மாதத்துக்கொருதடவை பிடுங்கி நட்டு வந்தால் ஆணிவேர் பலங்குறைந்து பக்கவேர் (சல்லிவேர்) பலப்பட்டு வளரும். இபபடி 3, 4 முறை பிடுங்கி நட்டால் மரங்கள் சீக்கிரம் பூத்துக் காய்க்கின்றனவாம்.

முதல் பாகம் முற்றும்.

பிரிட்டனில் கூட்டுறவு விவசாயம் அபிவிருத்தியடைந்துவருகிறது

எழுதியவர்: ஸ்ரீ பாட் வால்டர்ஸ்
(பிரிட்டன் விவசாயக் கூட்டுறவு சங்க கல்வியதிகாரி)

பிரிட்டனின் விவசாயத்துறையிலே விவசாயக் கூட்டுறவு சங்கங்களின் முக்கியத்துவம் அதிகமாகிக்கொண்டு வருகிறது.

விவசாயக் கூட்டுறவுச்சங்கங்கள் துரிதமாக முன்னேறிவந்ததால் 1901-ம் ஆண்டில், விவசாய அமைப்பு (organisation) சங்கமொன்று தேசிய சங்கமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதன் அமைப்புமுறை திட்டங்கள் சரியாக இல்லாததால் 1929-ம் ஆண்டிலே கலைக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மத்தியஸ்தாபனம் இல்லாமலேயே கூட்டுறவு சங்கங்கள் இருந்துவந்தன இங்கிலாந்தில் ஆனால் அங்குள்ள பல கூட்டுறவச் சங்கங்கள் யுத்த இடைக்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மந்தம, பணக்கஷ்டம், முதலியவைகளால் பாதிக்கப்பட்டபோதிலும் மமதுவாக அவைகளை சமாளித்துக் கொண்டு பல துறைகளிலே அனுபவமும்பெற்று, உறுதியான அமைப்புகளுடன் முன்னேறிக்கொண்டுவந்தன.

பிறகு இரண்டாவது யுத்த காலத்திலும் அதற்குப்பிறகும் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் துரிதமாக விருத்தியடைந்தது, விவசாய முன்னேற்றத்திற்கு ஒரு மத்திய ஸ்தாபனத்தின் அவசியம் விளங்கியதால், 1945-ம் வருஷத்தில், விவசாயக் கூட்டுறவு அசோசியேஷன் என்ற மத்திய ஸ்தாபனம் ஒன்று நிறுவப்பட்டது. இன்று அதில் 1,65,000 அங்கத்தினர்களைக் கொண்ட 208 சொசைடிகள் உள்ளன. ஆண்டொன்றுக்கு வியாபார அளவு 98·5 கோடி ரூபாயாகும்.

இந்தச் (அஸோசியேஷன்) சங்கம் ஓரளவு சர்க்கார் சகாயத்தைையை அடைந்து, கல்வி, ஆலோசனை கூறி வருவதைத்தவிர, வியாபாரம் செய்வதில்லை.

ஆரம்பகாலத்தில் பெரும்பாலும் இவ்வித விவசாயச் சங்கங்கள் குடியானவர்களின் தேவைகளை சப்ளை செய்வதையே நோக்கமாகக்கொண்டிருந்தன. ஆனால் இன்று அவைகளை 3 பிரிவுகளாக பிரிக்கலாம். அதாவது (1) குடியானவர்களின் தேவைகளை சப்ளை செய்பவைகள் (2) விவசாயிகளின் விளைபொருள்களை விற்பவைகள் (3) விவசாய அபிவிருத்தி—ஆலோசனை கூறுபவைகள் என்பவைகளே.

இச்சங்கங்கள் அளவிலும் நோக்கத்திலும் பலவிதமாக மாறுபட்டிருந்தாலும் ஒரு விஷயத்தில்மட்டும் ஒரே கருத்துடையவைகள். அதாவது அவைகள் விவசாயிகளுக்காக விவசாய முன்னேற்றத்திற்காக விவசாயிகளையே அங்கத்தினர்களாகக்கொண்டு விவசாயிகளாலேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

நாட்டு நடப்பும் பயிர்த்தொழில் செய்திகளும்

இங்கும் ! அங்கும் !! எங்கும் !!!

(1) கரும்பு விவசாயிகள் மகாநாடு.

விழுப்புரம் நகருக்கடுத்த வளவனூரில் தெ. இ. கரும்பு விவசாயிகள் 11-வது மகாநாடு, மாஜி கரும்பு ஆராய்ச்சி நிபுணர் சர் T. S. வெங்கட்ராமன் தலைமையில் நடந்தது. மகாநாட்டை மத்திய அரசாங்க உணவு விவசாய அமைச்சர் கனம் ஜெயின் அவர்கள் ஆரம்பித்துவைத்தார். சென்னை ராஜ்ய விவசாய மந்திரி கனம் பக்தவத்சலம், மற்றும் பலர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

பாரதியாருக்கு அஞ்சலி.

தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பாரதியார் செய்துள்ளசேவை அளவிடற்கரியது. அதற்கீடாக அவரின் நாமம் என்றென்றும் மறவாதிருக்க பாரதியார் பிறந்த எட்டையாபுரத்தில் ஒரு நினைவு மண்டபம்கட்டினார்கள். பாரதியன்பர்கள். இன்று அவர் வாழ்ந்த சென்னையிலே, அவர் வாழ்ந்துவந்த வீட்டைவாங்கி, ஒரு புத்தகசாலை நிறுவ தீட்டமிட்டிருக்கிறார்கள். சர்க்கார் அனுமதி கிடைத்தவுடனே டை கட்டிடத்தை வாங்கி பாரதி நினைவு புத்தகசாலையை நிறுவ ஸ்தல புத்தகசாலைக்கமிட்டி ஏற்பாடுசெய்து வருகிறது. வாழ்க பாரதிநாமம்!

தேவைகளை சப்ளை செய்யும் சங்கங்கள் விவசாயிகளின் உரம், உணவுப் பண்டம், விதை, கருவிகள், வீடுகட்டும் சாமான்கள்போன்ற பல தேவைகளை சப்ளை செய்கின்றன. பெரிய சங்கங்கள் மில்களை வைசதுள்ளன. அதில் உரங்களை பொடியாக்குவது. கலப்பது, உணவுப்பண்டங்களை அரைப்பது, விதைகளை (இயந்திரமூலம்) தரம் பிரிப்பது, சுத்தப்படுத்துவது, மருந்துகள் கலப்பது போன்ற வேலைகளை செய்து தருகின்றன.

இரண்டாவது கூறபபட்ட மார்க்கெட்டிங் (விற்பனை) சங்கங்கள், விவசாயிகளின் உபரிப்பொருள்கள், கோழிமுட்டை முதலியவைகளை விற்பனை செய்துகொடுக்கின்றன.

மூன்றாவது கூறப்பட்ட சங்கங்களின் வேலை ஆலோசனை கூறுவது தான். இவைகள் 2-வது யுத்தகாலத்திலிருந்து அபிவிருத்தியடைந்துவந்துள்ளன. விவசாயத்துறையில் இயந்திரமயமாகியதாலும், விஞ்ஞான இயந்திர நுணுக்க ஆலோசனைகள் தேவைப்படுவதாலும், கூட்டுறவு முறையினால் தான் இவைகளின் பயனை பெறலாமென்பதை அவர்கள் நன்கு தெரிந்து கொண்டுள்ளார்கள். உதாரணமாக, கால்நடைகளை விஞ்ஞான ரீதியாக கருதரிக்கச்செய்தல், கதிர்களை அறுவடை செய்தல் கதிரடித்தல், காயவைத்தல், விவசாய இயந்திரங்களை வாடகைக்கு கொடுத்தல் முதலியவைகளையும் செய்கின்றன. மேலும் விதை உற்பத்திசெய்தல், அடைகாத்தல்போன்ற வேலைகளும் மேற்கொள்ளுகின்றன.

இவ்விதம் நல்ல முறையிலுள்ள பழைய, புதிய சங்கங்களின் முன்னேற்றமானது, இங்கிலாந்தின் எதிர்காலத்தில் ஏற்படும். கூட்டுறவு அபிவிருத்திக்கு ஓர் அறிகுறியாகும்.

அடுத்த இதழில் ?

ஸ்ரீ பீடர்கில்ஸ் எழுதும்

"விவசாயிகள் ஒரு கூட்டாக வேலை செய்யும்போது"

என்னும் கட்டுரை வெளியாகும்.

உருளைக்கிழங்கு வெங்காயத்துக்கு விற்பனை வரிவிலக்கு.

சென்னை சர்க்காரும் ஆந்திர சர்க்காரும் உருளைக்கிழங்கு வெங்காயம் இரண்டிற்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களித்திருக்கிறது. இதனால் இரண்டு ராஜ்யத்திற்கும் 2 லக்ஷத்திற்குமேல் நஷ்ட மேற்படுமென்று கூறப் படுகிறது.

விவசாயத் தொழிலாளர்கள்

1956—57ம் ஆண்டில் விவசாயத் தொழிலாளர்களைப்பற்றி விசாரணை செய்ய முடிவுசெய்துள்ளது. இதுசம்பந்தமான பூர்வாங்கவேலைகள் ஜூலை மாதத்திற்குள் பூர்த்தியாகி சர்வே வேலையும் துவங்கும்'' இச்சர்வே பூர்த் தியாக ஓராண்டு வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அதற்கு பிறகு அது சம்பந்தமான ரிபோர்ட்டு வெளியிடப்படும்.

மண்வள ஆராய்ச்சி.

இந்தியா பூராவிலும் 24 இடங்களில் மண்வள பரிசோதனைக்கூடங்கள் ஏற்படுத்தி ஆராய்ச்சி செய்ய இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளார்கள். இது மண்வள—உர ஆராய்ச்சி சம்பந்தமாக அமெரிக்க விஞ்ஞான ஆராய்ச்சி மிஷன்—இந்திய கூட்டு முயற்சியாகும் இதில் ஒன்று கான்பூரில் நிறுவப் படும். 24 ஆராய்ச்சி செண்டர்களுக்கும் 29 லக்ஷம் செலவாகுமென உத் தேசிக்கப்படுகிறது.

டில்லியில் மிருகக்காக்ஷி சாலை.

இந்தியாவின் தலைநகரான டில்லியில் ஒரு மிருகக்காக்ஷிசாலை ஏற் படுத்தும் திட்டம் ஒன்று Mr. கார்ல் ஹெக்கன்பெக் அவர்களால் சமர்ப்பிக்க பட்டது. ''புராணகிலா'' பழையகோட்டை அருகில் ஷை காக்ஷி சாலை அமைப்பது சம்மந்தமாக ரிபபோர்டில் விவரிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்த மாக இதுவரை மத்திய சர்க்காருக்கு ரூ. 15,500 செலவாகியுள்ளது.

நீண்ட இழை பருத்தி உற்பத்தி.

பம்பாய் ராஜ்யத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 17000 ஏகரிலிருந்து 2,60,000 ஏகராக உயர்ந்துள்ளது என்று பம்பாய் விவசாய மந்திரி கனம் ஹீரே மேமீ 12உ கூறினர் இதனல் ஆப்ரிக்கா, அமெரிக்கா இறக்குமதியிலிருந்து 100000 பேல்கள் குறைந்து விட்டது என்றும், இதற்குமுன் 700000 பேல்கள் வரை ஒவ்வொருவருஷம் இறக்குமதிசெய்து வந்ததாக மேலும் கூறினர்.

விவசாய தகவல் அறிவிப்பு சேவை.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் விவசாய அபிவிருத்தி விஷயமாக ஒரு தகவலறிவிப்பு சேவை (Information Servlce) ஏற்படுத்த மத்ய பிரதேச சர்க்கார் முடிவு செய்துள்ளார்கள். சமுகநல அபிவிருத்தி திட்டம், தேசிய விஸ்தரிப்பு திட்டம் இவைகள் விருத்தி செய்யப்பட்டுள்ள தால் இவ்வித ஸ்தாபனம் உடனடியாகதேவை என்று கருதப்பட்டது. இதன்முலம் விவசாய ஆராய்ச்சி கூடங்கள். விஸ்தரிப்பு சேவை அதிகாரி கள்—விவசாயிகள் இவர்களுக்குத்தொடர்பு ஏற்படுத்தி பிர ாரம் செல்வதற்கு சாத்தியமாகும்படி செய்வதாகும்.

மீன் வளர்ப்பு பண்ணைகள்.

இரண்டாவது 5 ஆண்டு திட்டகாலத்தில் ரூ. 3,80,000 ரூபாய் செலவில் 500 மீன்வளர்ப்பு பண்ணைகள் ஏற்படுத்த உத்தர பிரதேச (UP) சர்க்கார் ஒரு திட்டம் வகுத்துள்ளார்கள்.

ஆண்டொன்றுக்கு 100 பண்ணைகள் வீதம் 27 ஜில்லாக்களிலும் 5 வருடகாலத்தில் இத்திட்டம் பூர்த்தி செய்யப்படும். முதல் ஆண்டிலேயே எல்லா ஜில்லாக்களிலும் மீன் பண்ணைகள் நிறுவப்படும்.

பயிர்த்தொழில்

(விவசாய வாரப் பத்திரிகை)

ஆசிரியர் :

A. S. வெங்கட்ராவ்

சந்தா விபரம்:

	ரூ.	அ.	ப.
வருட சந்தா (பொங்கல் மலர் உள்பட)	3	8	0
தனிப்பிரதி ...	0	1	0
தனி மலர் மட்டும்	0	8	0

விளம்பர விகிதம்:

முழு பக்கம் ரூ.	15	0	0
அரை ,, ,,	8	0	0
கால் ,, ,,	5	0	0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகை உண்டு.

தமிழ்நாடு முழுவதும் ஏஜண்டுகள் தேவை.

விபரங்களுக்கு :—

பயிர்த்தொழில் காரியாலயம்

ஹனுமந்தபுரம்

அன்னியூர் P. O., (via) விழுப்புரம்.

கிருஷிகனில் வெளியாகும் கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் கற்பனையேயன்றி எவரையும் குறிப்பிடுபவைகளல்ல.

கீழே குறிப்பிட்ட சந்தாக்கள் இந்த இதழுடன் முடிவடைகிறது. சந்தாதார் ரிஜிஸ்டரை புதுப்பித்து, விலாசம் அச்சடிக்கவேண்டியிருப்பதால், தொடர்ந்து சந்தாதாரராக இருக்க விருப்புள்ள நேயர்கள் தங்கள் சந்தா தொகையை உடன் அனுப்பி தங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ள கோறப்படுகிறார்கள்.

ப—ர்.

6. நா. நமசிவாயம்
11. மாணவ மன்றத்தார்
20. முத்துவெங்கிடபதி ரெட்டியார்
37. A. V. ராசையா
45. S. அய்யாசாமி முதலியார்
51. ராமலிங்கம் செட்டியார்
129. குமரவேல் கவுண்டர்

இந்த மாதத்தில் புதுப்பிக்கப்பட்ட பழைய சந்தாக்கள்

32. V. ராமசாமி முதலியார்
22. S. வெங்கிடகிருஷ்ணன்
54. G. ஷண்முகசுந்திரம்
56. K. S. சுப்ரமண்யம்
103. T. K. M. ஆறுமுக நாடார்

இந்த மாதத்தில் சேர்ந்த புதிய சந்தாதார்கள்

178. M. K. முத்து4குமாரசாமி
179. T. N. கிருஷ்ணராவ்
180. N. ராமச்சந்திரன்

புதிய சந்தா அனுப்பியும் பழைய சந்தாவை புதுப்பித்தும் ஆதரவளித்த நேயர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப—ர்.)

ஆசிரியர்: ஏ. எஸ். வெங்கட் ராவ்

பயிர்த்தொழில்

(விவசாய வார இதழ்)

ஹனுமந்தபுரம் - அன்னியூர் போஸ்டு - (வழி) விழுப்புரம்

கடித எண் .... தேதி ....19 .

ஐயா,

தங்கள் தேதியுள்ள கடிதம் கிடைத்தது. எங்கள் பத்திரிகையின் மாதிரிப்பிரதி ஒன்று இத்துடன் அனுப்பியிருக்கிறோம். வருட சந்தா ரூ. 3—8—0. தனிப்பிரதி அணா 0—1—0. பொங்கல் மலர் அணா 8 ஆகும். இத்துடன் ஏஜன்சி நிபந்தனைகளும் தெரியப்படுத்தியிருக்கிறோம். தங்கள் முடிவான அபிப்பிராயத்தை தெரியப்படுத்தக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

A. 6 சந்தாதார்களை சேர்த்து அனுப்பும் நேயர்கள் சந்தா ஏஜண்டுகளாவார்கள். அவர்களையும் ஒரு சந்தாதாராக பதிவு செய்துகொண்டு ஓராண்டுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பிவாபபடும். மலர்களுக்கும் சேர்த்து அனுப்பினால் மலர்களும் பேனாவும் இனாம உண்டு.

B. (1) விற்பனை கமிஷன் ஏஜண்டுகள்:—5 பிரதிகளுக்கு குறைந்த ஏஜன்சி கிடையாது. ஒரு இடத்திற்கு ஒரு ஏஜன்சிதான் உண்டு.

(2) பிரதி 1-க்கு 0—4—0 வீதம் முன் பணம் கட்டவேண்டும். விற்பனையாகும் பிரதிகளின்மேல் 25% கமிஷன் உண்டு.

(3) பிரதி மாதம் 5உக்குள் மாதாந்திர விற்பனை கணக்குகளையும் விற்பனைத் தொகைகளையும் அனுப்பிவைக்கவேண்டும். 10 தேதிக்குள்ளாக கணக்கு தீர்த்து கமிஷன் அனுப்பிவைக்கப்படும். 25%-க்குமேல் விற்பனையாகாத பிரதிகளை வாபீஸ் பெற்றுக்கொள்ளமுடியாதாகையால் தேவையான பிரதிகளுக்கு மட்டுமே முன்னதாக ஆர்டர் கொடுக்கவேண்டும்.

(4) டிபாசிட் கட்டாதவர்களுக்கு ஏஜன்சி கொடுக்கமுடியாது. விற்பனை தொகைகளை சரிவர அனுப்பாத ஏஜண்டுகளை முன்னறிவிப்பின்றி நீக்கிவிட நிர்வாகத்திற்கு உரிமையுண்டு.

(5) நமது காரியாலய இதர வெளியீடுகளாகிய காலண்டர் பௌண்டன்பேனா, புத்தகங்கள், விதைகள், செடிகள் விற்பனைக்கும் கமிஷன் உண்டு.

(6) விதைகள், புத்தகங்கள், செடிகள் விற்பனைக்கு 20% கமிஷன் உண்டு.

(7) சந்தாதார்கள் சேர்த்துக்கொடுத்தால் 12⅓% கமிஷன் உண்டு.

(8) விளம்பரங்கள் சேகரித்துக் கொடுத்தால் 15% கமிஷன் தரப்படும்.

(9) 5 பிரதிகளுக்கு குறைவாக விற்பனை செய்யும் ஏஜண்டுகளுக்கு கமிஷன் கிடையாது.

(10) இந்த ஏஜன்சி நிபந்தனைகளை மாற்றவோ ரத்து செய்யவோ சேர்க்கவோ நிர்வாகத்திற்கு பூரண உரிமையுண்டு. ஏஜண்டுகள் எக்காலத்திலும் அதற்கு கட்டுப்பட்டவர்களாவார்கள்.

இது விபரங்களுக்கு:—

சர்க்குலேஷன் மானேஜர், ''பயிர்த்தொழில்''

நேயர்களுக்கு விசேஷ அறிவிப்பு.

பல நேயர்களின் விருப்பப்படி "பயிர்த்தொழில்" வாரப் பத்திரிகையாக வெளிவரும். இதில் வாராந்திர பாரதநாட்டுப் பயிர்த்தொழில் செய்திகள் (2) விவசாயி, விவசாய சம்பந்தமான சட்டங்கள், உத்திரவுகள், (3) விவசாயம், கால்நடை, கிராம முன்னேற்ற கட்டுரைகள், (4) கிராமீய சிறு கதை, துடர்கதை, நாடகம் (5) காலபலன், ஜோதிடம், காலநிலை, (6) கேழ்வி பதில் முதலியன முதலிடம் பெறும்:—

(1) பயிர்த்தொழில் குறிப்பும் திரட்டும்.
(பல அறிய ஆராய்ச்சி—அனுபவ குறிப்புக்களின் கோர்வை.)

(2) முன்னேற்றப் பாதையிலே நாம் !
(விவசாய ஆராய்ச்சி, விஸ்தரிப்பு சேவை திட்டங்கள்)

(3) பயிர்த்தொழில் விளக்கம் (வினாவிடை)
(சென்னை சர்க்காரின் பாடதிட்டப்படி தயாரிக்கப்பட்டது)

(4) ஆயில் எஞ்சினும் பராமரிப்பும்.
(இயந்திர நுணுக்க அமைப்பு, நிர்வாகம்பற்றியது).

முதலிய கட்டுரைகள் துடர்ச்சியாக வெளிவரும். விவசாயிகள், கிராம ஊழியர்கள், விவசாய பரீக்ஷைக்கு போக விரும்பும் ஆசிரியர்கள், எஞ்சின் வைத்துக்கொண்டுள்ள விவசாயிகள் பலருக்கும் மிகவும் உபயோகமுள்ளது.

வெள்ளி தோறும் 12—16 பக்கங்களில் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 3—8—0 (பொங்கல் மலர் உள்பட)

தனி பிரதி 0—1—0 (ஷை 0—8—0)

உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

குறிப்பு:—'கிருஷிகன்' வனமகோத்சவ மலர் ரூ. 1—0—0, ஜப்பானிய நெல் சாகுபடி மலர் அணா 8, ரூ. 1—8—0 மட்டில் அனுப்பினால் தபால் செலவு இனாம். "பயிர்த்தொழில்" வாரயேட்டின் சந்தா ரூ. 3—8—0 ஆக ரூபாய் ஐந்து (5—0—0) சேர்த்து அனுப்பினால் கிருஷிகன் பௌண்டன் பேனா ஒன்று இனாம் அனுப்பிவைக்கப்படும். விசேஷ மலர்கள் உள்ளவரைதான் பேனா இனாம் உண்டு. வி. பி. இல்லை, முன் பணம் அனுப்பவேண்டும். இன்னும் சில (மலர்களின்) பிரதிகளே இருப்பதால் உடனே பதிவு செய்துகொள்ள கோரப்படுகிறார்கள்.

"பயிர்த்தொழில்" காரியாலயம்,

ஹனுமந்தபுரம் :: அன்னியூர் போஸ்டு :: விழுப்புரம் (வழி)

கால்நடை பகுதி

வெக்கை

(முன் இதழ் 19-ம் பக்கத்தொடர்ச்சி)

கால்நடை வியாதிகளிலே மிக கொடிய வியாதி வெக்கை என்பதாக முன்னமே தெரிவித்தோம். இவ்வியாதியினால் பீடிக்கப்படும் பிராணிகள் பெரும்பாலும் இறந்துபோகின்றன. தப்பித்தவறி பிழைத்த போதிலும் வேலைக்கு உபயோகமில்லாத நிலையிலோ அல்லது, கறவைக்கு உதவாத நிலையிலோதான் அவை இருக்கின்றன. இவ்விதம் மரணமடையும் அல்லது உபயோகமற்றுப்போகும் கால்நடைகளின் எண்ணிக்கை (ஆண்டொன்றுக்கு) 4 லக்ஷமென மதிப்பிடப்படுகிறது. இதன் மதிப்பு ரூபாய் 30 கோடியாகும்.

1. இவ்வளவு பெரிய நஷ்டத்தை நாட்டிற்கும், நமக்கும் கொடுத்து வரும் இவ்வெக்கை அல்லது மாட்டுப் பிளேக் என்பது இந்த ராஜ்யத்தின் கால்நடைகளுக்குவரும் ஒரு கொடுமையான தொத்து வியாதி. இந்த பத்திரிகையில் கீழே விவரித்திருக்கிறபடி, தக்க பரிகாரங்கள் தேடிக் கொள்ளாவிட்டால், சீக்குக்கண்ட மாடுகள் அநேகம் சேதமாகிவிடும். இந்தத் தொத்து வியாதி, மாடுகள், எருமைகள் முதலியவைகளை அதிகமாகப் பீடிப்பதுடன், சில சமயங்களில் அசைபோடுகிற எல்லா மிருகங்களிலும் காணப்படுகிறது. வியாதி கண்ட மாடுகளில் அநேகமாக 50 சதம் இறந்தே போகின்றன.

2. கால்நடைகள் வைத்திருப்பவர்களுக்கு இந்த வியாதியின் நிலைமை நன்றாகத் தெரியுமாதலால், ஒரு கிராமத்து மாடுகளுக்கு இந்த வியாது கண்டதும், அது உண்டுபண்ணுகிற பொருட்சேதம், வேலைத்தவக்கம் முதலிய பலவிதமான இடைஞ்சல்களைப்பற்றிச் சொல்லவேண்டிய அவசியமில்லை. மாடுகள் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இந்த வியாதியின் கொடுமையை அறிந்து இதனால் உண்டாகும் அதிக மரணத்தைத் தடுப்பதில், கால்நடை அதிகாரிகளுக்கு உதவி செய்யவேண்டுவது அவர்களின் சுய நன்மைக்காகமட்டுமல்ல, தம் நாட்டுக்கு செய்யவேண்டிய கடமையுமாகும்.

3. வியாதிகண்ட மிருகத்தின் இரத்தம், வாயிலிருந்து வடியும் வாய்நீர், மூக்கிலிருந்து வடியும் சளி, கண்களிலிருந்து வடியும் பீளை, சாணி, மூத்திரம் முதலியவைகளிலிருக்கும் (கண்களுக்கும் புலப்படாத) ஒரு கிருமியே இந்த தொத்து வியாதிக்குக் காரணம். வெக்கை வியாதி கண்டமாட்டின் இரத்தம், சளி, சாணி முதலியவை வியாதி தொத்தக்கூடிய மிருகங்களின் இரத்தத்தோடு கலப்பதனாலோ அல்லது உணவுப் பொருள்களோடு சேர்த்து உண்ணப்படுவதினாலோ, இதர மிருகங்களில் இந்த வியாதி கண்டு பரவுகிறது. வியாதி கண்ட மாட்டின் இரத்தத்தை வியாதி தொத்தக்கூடிய மிருகத்தின் தோலுக்குள் செலுத்துவதே இந்த வியாதியைச் சாதாரணமாக உண்டுபண்ணுகிற விதம். வியாதியின் முதற் குறிகள் இவ்விதம் தோலுக்குள் செலுத்திய மூன்று நாட்களுக்குப் பின் காணப்படுகிறது. மாடுகள் வைத்திருப்போருக்கு இந்த வியாதி சம்பந்தமாக முக்கியமாக தெரியவேண்டியதென்ன

வென்றால், ஒரு கிராமத்தில் யாதொரு காரணமுமின்றி இந்த வியாதிதானே தோன்றியிருக்கமுடியாது. அதாவது இந்த வியாதிக்குக் காரணமாகிய கிருமி தற்சமயம் வெக்கைநோய் கண்டோ அல்லது ஏற்கனவே வெக்கை நோய் ஏற்பட்டிருந்தோ இருக்கும் கிராமத்து மாடுகளிலிருந்து எந்த வழியாகவாவது வந்து சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். இந்த வியாதி சம்மந்தமான ஒரு நல்ல விஷயம் என்னவென்றால், இந்தக் கிருமி உடம்புக்கு வெளியே சூரிய வெப்பத்திலும் காற்றிலும் நெடுநாள் உயிர் வைத்திருக்க முடியாது. நிழலில் இந்தக் கிருமி சாணம், வாய்நீர், மூத்திரம் முதலியவைகளில் அதிகப்பட்டால் மூன்று நாட்கள் உயிரோடிருக்கலாம். சூரிய வெப்பத்தில் இவைகள் சில மணி நேரத்திற்குள் இறந்துவிடுவதால் இந்த வியாதியைப் பரவச்செய்ய முடியாது.

4. ஒரு கிராமத்தில் இந்த வியாதி ஆரம்பிக்கிறதாக இருந்தால் முதலில் இரண்டொரு கால்நடைகள் அதிக ஜுரத்தோடும், அசதியாகவும், மயிர் சிலிர்த்தும், முகம் வரண்டும், தீனி தின்னாமலும் இருக்கும். வெளியே நின்றுகொண்டிருந்தால் காதும் தலையும் தொங்கவிட்டுக்கொண்டு குன்னிப்போய் அதிகம் வியாதியாக இருக்கும் கால்நடைகள் போலவே காணப்படும், அசை போடாது. சாணி வரண்டும் கொஞ்சங் கொஞ்சமாகவும் போடும். மூத்திரம் சாதாரணமாகப் போவதைவிடக் குறைந்தும், நிறம் கருத்துமிருக்கும். வியாதி கண்டது பசு, எருமையாயிருந்தால் பால் குறைந்துமிருக்கும்.

ஜுரம் 103 முதல் 106 டிக்கிரி அல்லது அதற்கு மேலும் காணப்படும் இந்தக் குறிகள் இரண்டொரு நாளைக்கு இருக்கும். பின் வெக்கைநோயின் வெளிப்படையான நிச்சயக்குறிகள் காணப்படுகின்றன. வாயிலிருந்து அதிகமாக வாய்நீர் வடியும். அது நுரைத்தும் இரத்தங் கலந்துமிருக்கும். உதடுகளின் உட்பக்கத்தைப் பார்த்தால் சிதறியதுபோன்ற சிறு இரத்தப் புள்ளிகள் முதலில் காணப்படுகின்றன. இவைகள் மாவோடு கலந்த தவுடு போல உதட்டின் உட்பக்கங்களிலும், முன்பற்களின் ஈறுகளிலும் காணப்படும். இவைகளை நாக்கின் உட்பக்கம், மேல்வாய் ஈற்றிலும் பக்கங்களிலும் பார்க்கலாம். இந்தக் கொப்புளங்களைக் கையால் துடைத்தால் அடியில் சிவப்பாயிருக்கும். அதிலிருந்து இரத்தங் கிளம்பும். கொப்புளங்கள் தோன்றுகிற அதே சமயத்தில் கண்மூடிகளின் உட்பாகம் சிவக்கிறது. கண்களிலிருந்தும், நாசித்துவாரங்களிலிருந்தும் நீர்வடிய ஆரம்பிக்கிறது. சளி முதலில் நீர் போலிருந்து பின் இறுகிப் பழுத்து சாம்பல் நிறம்போலாகிறது. இது இரத்தங்கலந்தும் வீக்கத்தோடுமிருக்கும். வாயில் கொப்பளங்கள் கண்ட அதே காலத்தில் குடலிலும் வேக்காடு ஆரம்பிக்கிறது. முதலில் மலச்சிக்கல் இரண்டொரு நாளிருக்கும் பின் மிகுந்த கழிச்சல் காணுகிறது. வரவரக் கழிச்சல் பலத்து துர்நாற்றத்தோடும் இரத்தங் கலந்தும் விழுகிறது கடைசியாக கழிச்சல் கஞ்சித் தண்ணீர் போலாகி தானே போக ஆரம்பிக்கிறது.

(தொடரும்)

குறிப்பு:— முன் இதழ் 19-ம் பக்கத்தில் கடைசி பாராவில் உள்ள 1 லக்ஷம் கால்நடைகள் என்பதை பசுக்கள் என்று திருத்திக் கொள்ளவேண்டும்

Edited & Published by A. S. Venkata Rao,
Hanumanthapuram, Anniyur B. O., Villupuram R. M. S.
Printed at The Hanuman Printing Works, Villupuram.